# இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர்(EAM) அவர்களின் மலேசியா பயணம் (மார்ச் 27-28, 2024)

மார்ச் 28, 2024

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், டாக்டர் . எஸ். ஜெய்சங்கர்(EAM) அவர்கள் 2024 மார்ச் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் மலேசியாவிற்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டார்.

டாக்டர் . எஸ். ஜெய்சங்கர் அவர்கள் மலேசியப் பிரதமர் H.E. YAB டத்தோஸ்ரீ அன்வர் பின் இப்ராஹிம் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து, பிரதமர் மோடியின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்தியா-மலேசியா மேம்படுத்தப்பட்ட மூலோபாய கூட்டாண்மையின் கீழ் இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதில் பிரதமர் அன்வார் அளித்த ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

டாக்டர் . எஸ். ஜெய்சங்கர்(EAM) அவர்கள் மலேசிய வெளியுறவு அமைச்சர், HE டத்தோஸ்ரீ உத்தாமா ஹாஜி முகமது பின் ஹாஜி ஹாசன் அவர்களுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார். இதில் அரசியல், வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், பாதுகாப்பு, டிஜிட்டல், கலாச்சாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் விரிவான விவாதங்களை நடத்தினர். பின்னர் பிராந்திய மற்றும் உலகளாவிய நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். மேலும் EAM டிஜிட்டல் துறை அமைச்சர் HE YB கோபிந்த் சிங் தியோ அவர்களையும் சந்தித்தார்.

இந்த பயணத்தின் போது, EAM அவர்கள் தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் தொழில்துறை தலைவர்களுடன் ஒரு வட்ட மேசை சந்திப்பை நடத்தினார். பின்னர் அவர் மலேசியாவில் உள்ள புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் கலந்துரையாடி, இந்தியா-மலேசியா உறவுகளுக்கு அவர்கள் அளித்த பங்களிப்பைப் பாராட்டினார்.

ஆசியான் மற்றும் நமது கிழக்கு நோக்கிய கொள்கையில் மலேசியா இந்தியாவின் முக்கிய பங்குதாரராக உள்ளது. மலேசியாவிற்கு EAM பயணம் மேற்கொண்டது, மேம்படுத்தப்பட்ட மூலோபாய கூட்டாண்மையை மேலும் மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியது.

**புது தில்லி**
**மார்ச் 28, 2024**